**அரநாயக பிரதேச சபை - 2023**

-----------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

அரநாயக பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய தெளிவுபடுத்தும் தகவல்களின் பொழிப்புடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(1) உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரநாயக பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்கள் தொடர்பாக எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய கட்டுப்படுத்தும் தர்ப்பினரின் பொறுப்புக்கள்**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக முன்வைத்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடும் செயற்பாடுகள் தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு, தொடர்புடைய தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்ல வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க

கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைமுறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பிரதேச சபையின் கட்டுப்பாட்டு சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக காலவரையறைகளினுள் மற்றும் உரிய சட்ட விதிகளிற்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுததப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் விடயங்கள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்து பதிவேடு மற்றும் இன்வென்ட்ரி பதிவேடு பிரகாரம் இயந்திர உபகரணங்கள் மீதியை விட ரூபா 19,111,148 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் அம மீதி காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆண்டில் சரி செய்வதென. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | பண்டகக் கணிப்பீட்டன் பிரகாரம் உஸ்சாபிடிய மற்றும் அரநாயக நூலக புத்தகங்களின் பெறுமதியை விட ரூபா 109,993 தொகை கூடுதலாக அம் மீதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டு இருந்தது. | பதிவேட்டை பரீட்சித்து எதிர்காலத்தில் சரி செய்வதென. | - மேற்படி - |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்கு விடயங்கள் 05 இல் நிதிக்கூற்றுக்கள் பிரகார மீதி மற்றும் அதற்குரிய நேரொத்த அறிக்கை பிரகாரம் அம் மீதிகளிற்கு இடையில் ரூபா 6,190,443 ஆன வித்தியாசம் நிலவியது. | பழைய மீதி என்பதால் வித்தியாசத்தை கண்டறிய முடியாதென. | வித்தியாசத்தை இனக்கம் செய்ய வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத் தொகை ரூபா 27,670,079 ஆன நடைமுறையல்லா சொத்துக்களிற்கான அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2024 ஆண்டில் சரிசெய்வதென. | எழுத்துமூல சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| நிதிப் பிரமாணம் 571 | தீர்க்கப்படாத ரூபா 700,020 ஆன 02 ஆண்டுகளை விஞ்சிய 44 வைப்புக்களை வருமானத்திற்கு எடுத்திருக்கவில்லை. | இதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதென. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2023 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 22,255,358 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,733,416 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கு மற்றும் கடந்த ஆண்டிற்குரியதாக சமர்ப்பிக்கப்பட்டு இருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **மதிப்பிடப் பட்ட வருமானம்** | **பில்லிட்ட வருமானம்** | **சேகரித்த வருமானம்** | **திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை** | **மதிப்பிடப் பட்ட வருமானம்** | **பில்லிட்ட வருமானம்** | **சேகரித்த வருமானம்** | **திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை** |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 2,380,628 | 2.326,003 | 2,800,541 | 247,236 | 2,478,270 | 2,787,555 | 2,665,911 | 326,136 |
| வாடகை | 6,674,950 | 1,416,940 | 3,198,482 | 3,000 | 4,632,500 | 3,376,427 | 3,375,962 | 147,441 |
| அனுமதிப்பத் திர கட்டணம் | 773,170 | 1,113,111 | 967,852 | 111,490 | 408,564 | 560,910 | 554,910 | 9,000 |
| ஏனைய வருமானம் | 87,165,382 | 4,348,330 | 5,247,056 | 44,939 | 3,101,200 | 4,483,650 | 3,797,597 | 61,904 |
| மொத்தம் | 96,994,130 | 9,204,384 | 12,213,931 | 406,664 | 10,620,532 | 11,208,542 | 6,600,491 | 544,481 |

### 2.2.2. வருமான சேகரிப்பின் செயலாற்றுகை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வியாபார கணிப்பீட்டின் பிரகாரம் 2023 ஆண்டின் போது 419 வியாபாரங்களை இனங்கண்டிருந்த போதும், வியாபார வரி பதிவேட்டின் பிரகாரம் 1314 நிறுவனங்களில் இருந்து வரித் தொகை கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் 895 வியாபார அலகுகளை இனங்காணாததால் வியாபார கணிப்பீடின் சரியான தன்மை கேள்வியாக இருந்தது. | எதிர்காலத்தில் அதன் குறைகளை தவிர்த்துக் கொண்டு நடவடிக்கை எடுப்பதென. | வியாபார கணிப்பீட்டை சரியாக மேற்கொண்டு வரித் தொகையை அறவிட நடவடிக்கைள எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொது மக்கள் எதிர்ப்பினால் தெரிவு செய்த காணியில் இயற்கை பசளை கொட்டில் நிர்மாணிக்கப்படவில்லை. அதற்கு பதிலாக ரூபா 1,076,500 ஆன வருடாந்த குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொண்ட தனியார் காணி ஒன்றிற்கு கழிவுகள் வெளியிடப்பட்டு இருந்தன. 2023 ஆண்டில் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக ரூபா 8,395,458 செலவிட்டிருந்த போதும், கழிவுகளால் பசளை உற்பத்தி செய்திருக்கவில்லை. | பொது மக்கள் எதிர்ப்பின் காரணமாக கழிவுகளை வெளியிட முடியவில்லை. குத்தகை உரிதி பதிவு செய்யப்படாததால் நிர்மாணிக்க முடியாத போனதாகவும், ஒன்றுதிரலும் பொலிதீன் பிரேல் செய்யப்படுவதென. | கழிவுப் பொருள் முகாமைத்துவத்தை சரியாக மேற்கொள்ள வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் செயலாளரினால் அறிவுரை பிரகாரம் தேவையான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாது 764 வீதி விளக்குகள் நிறுவப்பட்டு இருந்தன. | அமைச்சின் அறிவுரை பிரகாரம் நடவடிக்கை எடுக்கிறேன். | ஊரிய அறிவுரை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | திப்பிடிய பொது சந்தை கட்டிடத் தொகுதியின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு ஓராண்டிற்கு அதிக காலம் கடந்துள்ள போதும், மின்சாரம் இல்லாதமை காரணமாக திறந்திருக்கவில்லை. | பொது சந்தை கட்டிடத் தொகுதியை திறப்பதற்கான தாமதத்திற்கு காரணம் மின்சாரம் இல்லாதமையென. | சோத்துக்களை பயன்பாடின்றி வைத்திருக்கக் கூடாது. |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 77 அங்கீகார பதவியணியினர் எண்ணிக்கையில் 13 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 10 பேர்களின் மிகையும் நிலவின. அது தவிர சேவை உடன்படிக்கை மற்றும் ஏற்பவருக்கு தனிப்பட்டவான 10 பதவிகளும் அங்கீகரிக்கப்பட்டு இருந்தன. | முகாமைத்துவ சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் மற்றும் புதிய ஆளணியினரை அங்கீகரித்துக் கொள்ள அல்லது ஆட்சேர்க்க இயலுமை இல்லையென. | சேவை வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமற்ற ரூபா 426,128 ஆன டெக்டர் மற்றும் டேலர் ஒன்றின் உரிமையை சுவீகரித்திருக்கவில்லை. | பழுதடைந்த நிலையில் உள்ள டெக்டர் மற்றும் டேலரின் பதிவுரிமை கிடைத்த பின்னர் ஏலத்தில் விற்பதென. | சொத்துக்கள் பயன்பாடின்றி வைத்திருக்கக் கூடாது. |
| (ஆ) | சபைக்கு சொந்தமான ரூபா 9,310,730 ஆன 04 வாகனங்கள் 03 டேலர்கள் 2018, 2019 மற்றும் 2021 ஆண்டுகளில் இருந்து பயன்படுத்தாது காணப்பட்டன. | டேலரொன்று பராதீனத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது எனவும் எஞ்சிய 03 வாகனங்கள் மற்றும் 02 டேலர்களை திருத்தி பயன்படுத்துவதென. | - மேற்படி - |
| (இ) | ஏக்கர் 18: பர்சஸ் 18.82 ஆன சபைக்கு சொந்தமான 23 மயானங்களின் உரிமையை சுவீகரித்து மதிப்பிட்டு பெறுமதியை கணக்கீடு செய்திருக்கவில்லை. மயானங்களின் எல்லைகள் பாதுகாக்கப்பட்டு இருக்காததுடன் மயானங்களில் செயற்பாடுகளை முறையாக்க துணைச் சட்டம் விதிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, 22 மயானங்களில் காணப்படும் பெறுமதியான மரங்களை இனங்கண்டு ஆவணப்படுத்தி இருக்கவில்லை. | மதிப்பீட்டிற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பியுள்ளதாகவும் எதிர்காலத்தில் எல்லை வேலிகளை தீர்த்து மயானங்களை வர்த்தமானியில் பிரசுறிப்பதெனவும் மயானங்களில் காணப்படும் பெறுமதியான மரங்களை ஆவணப்படுத்துவதெனவும். | சொத்துக்களை பாதுகாத்துக் கொள்ள மற்றும் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |